## 8.2 சத்துணவு திட்டத்தை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கட்டுப்பாட்டிலிருந்து சமூக நல இயக்கக கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்தது

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மதி–3) துறை

அரசாணை (நிலை) எண். 80 நாள் : 20.7.2006

1) அரசாணை எண் 857, பொதுத்துறை நாள் 28.5.82
2) அரசாணை எண் 308, ச.ந. (ம) ச.உ.தி. துறை நாள் 29.5.82
3) அரசாணை எண் 198, ச.ந. (ம) ச.உ.தி. துறை நாள் 4.4.1991
4) அரசாணை எண் 498, ச.ந. (ம) ச.உ.தி. துறை நாள் 18.9.92
5) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண் 52159/2006 (ச.உ.தி.–1) நாள் 3.7.2006
6) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் மதிய உணவு திட்டங்களின் கட்டுப்பாட்டை மாற்றம் செய்வது குறித்து 28.6.2006ம் தேதி நடைபெற்ற கூட்ட நடவடிக்கை
7) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கடிதம் ந.க.எண் 5627/2006/ச.உ.தி 1/நாள் 30.7.2006

**ஆணை**

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத்திட்டம் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்குவதன் மூலம் அவர்களின் உடல் நலத்தை நன்கு பாதுகாத்து அவர்களின் ஆற்றலை வளர்க்கும் நோக்குடன் தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களில் முன்னோடி திட்டமாக உள்ளது. இத்திட்டம் 01.07.1982 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

- துவக்கத்தில் ஊரக பகுதியிலுள்ள குழந்தைகள் நல மையங்களில் 2 வயது முதல் 6 வயதிற்குற்பட்ட முன் பருவக் கல்வி பயிலும் குழந்தைகள் மற்றும் 5 வயது முதல் 9 வயது முடிய உள்ள ஆரம்ப பள்ளி குழந்தைகள் ஆகியோர் பயனடைந்தனர்.
- 15.09.1982 முதல் இத்திட்டம் நகர் பகுதிகளிலும் அமல்படுத்தப்பட்டது.
- 15.09.1984 முதல் 10 வயது முதல் 15 வயது வரையிலான பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் விரிவு படுத்தப்பட்டது.
- 15.01.1983 முதல் ஓய்வூதியம் பெறும் முதியோருக்கு விரிவு படுத்தப்பட்டது. 07.2.1995 முதல் கருவுற்ற தாய்மார்களும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டனர்.

2. ஜூலை 1982–ல் துவக்கப்பட்ட இந்த சத்துணவுத்திட்டம் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு துறைகளின் மூலம் செயல்பட்டு வந்துள்ளது.

1. கல்வித்துறை 1982 முதல் மே 1990 வரை
2. ஊரக வளர்ச்சித்துறை ஜூன் 1990 முதல் செப்டம்பர் 1992 வரை
3. சமூக நலத்துறை அக்டோபர் 1992 முதல் செப்டம்பர் 1997 வரை
4. ஊரக வளர்ச்சித்துறை அக்டோபர் 1997 முதல் நாளது வரை

தற்போது கீழ்க்கண்ட துறைகள் இத்திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை | சமூக நலத்துறை மூலமாக |
| 2. | திட்ட ஒருங்கிணைப்பாளர் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள், 3வது திட்டம் | |
| 3. | நகராட்சி நிர்வாக ஆணையர் | நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை |

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், 5 வயது முதல் 15 வயது வரை (அதாவது முதல் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை) அரசு, அரசு உதவி பெறும் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு பள்ளிச் சத்துணவு மையங்களில் சத்துணவு வழங்கும் பணியை கண்காணிக்கிறார். 5 வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு சத்துணவு வழங்குவதை திட்ட ஒருங்கிணைப்பாளர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் 3வது திட்டம் கவனித்துக்கொள்கிறார்.

4. இந்திரா நினைவு குடியிருப்புத்திட்டம் சம்பூர்ண கிராம சுய வேலைவாய்ப்புத்திட்டம், சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத்திட்டம், தமிழ்நாடு ஊரக வேலை உறுதி திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம், சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டுத்திட்டம், முழு சுகாதாரத் திட்டம், சமத்துவபுரம், தன்னிறைவுத்திட்டம் போன்ற பல்வேறு மத்திய, மாநில அரசு திட்டங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் செயல்படுத்தவேண்டியுள்ளது. அத்துடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை பணியாளர்களின் பணியமைப்பு ஆகியவற்றை நிர்வகிக்க வேண்டியுள்ளதால் அவரது வேலை பளு மிக அதிகமாக உள்ளது. அதனால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் சத்துணவு திட்ட செயலாக்கத்தை கண்காணிக்க இயலாத நிலை உள்ளது.

5. சத்துணவு திட்டம், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை செயலாளர் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் அவர்களால் அரசு மட்டத்தில் கண்காணிக்கப்படுகிறது. எனவே இத்திட்டம் ஊரக வளர்ச்சி இயக்ககக் கட்டுப்பாட்டிலிருப்பதைவிட சமூக நல இயக்ககக் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதே பொருத்தமாக இருக்கும் என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். அதே சமயத்தில் மாவட்ட அளவிலும் வட்டார அளவிலும் செயல்படுத்தும் அடிப்படை அமைப்பில் எந்த மாற்றமும் இல்லை. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தொடர்ந்து சத்துணவு மையங்களை நிர்வகித்தல், கண்காணித்தல், பராமரித்தல் ஆகிய பணிகளை கவனித்து வருகிறார். வட்டார அளவில் விரிவாக்க அலுவலர் (சத்துணவு) மற்றும் ஒரு இளநிலை உதவியாளர் ஆகியோரின் உதவியுடன் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) திட்டத்தை செயல்படுத்தும் அலுவலராக உள்ளார் எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்த பின் பள்ளிச் சத்துணவு மையங்கள் மூலம் 5 முதல் 15 வயது வரையுள்ள மாணவ, மாணவியருக்கு (முதல் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை) சத்துணவு வழங்கும் திட்டத்தை ஊரக வளர்ச்சி இயக்ககக் கட்டுப்பாட்டிலிருந்து சமூக நல இயக்கக கட்டுப்பாட்டிற்கு மாற்றி அரசு ஆணையிடுகிறது. இதனை தொடர்ந்து ஊரக வளர்ச்சி இயக்ககத்திற்கு என அனுமதிக்கப்பட்ட கீழ்க்கண்ட பதவிகள் / பணியாளர்களை பணி மாறுதல் மூலம் (on transfer of service) சமூக நல இயக்ககத்திற்கு மாற்றி அரசு ஆணையிடுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | இணை இயக்குநர் | – | 1 |
| 2. | கணக்கு அலுவலர் | – | 1 |
| 3. | கண்காணிப்பாளர் | – | 1 |
| 4. | உதவியாளர் | – | 2 |
| 5. | தட்டச்சர் | – | 1 |
| 6. | சுருக்கெழுத்தர் | – | 1 |
| 7. | அலுவலக உதவியாளர் | – | 1 |

இவ்வாறு மாற்றப்பட்ட பணியாளர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் நிர்வாக கட்டுப்பாட்டிற்கு பதிலாக சமூக நல இயக்குநரின் நிர்வாக கட்டுப்பாட்டில் இருப்பார்கள் என்றும் மாநில அளவிற்கு கீழே உள்ள அனைத்து நிர்வாக அமைப்பிலும் எந்த மாற்றமும் இன்றி அப்படியே இருக்கும் என்றும் சத்துணவு மைய கட்டிடங்கள் ஊரக வளர்ச்சித்துறையின் பராமரிப்பில் இருக்கும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்